# DEPOSITION OF WITNESS

## IN THE COURT OF DISTRICT MUNSIF, SHENCOTTAH

O.S.No.38/2024

Deposition of witness for PW1

| | | |
|---|---|---|
| Name | : | மாரியம்மாள் |
| Husband's Name | : | சுப்புராமன் |
| Village | : | |
| Taluk | : | |
| Religion | : | |
| Age | : | 52 |

Solemnly affirmed in accordance with the Provisions of Act X of 1873 on the day of 17.04.2026.

முதல் விசாரணை:

நான் இந்த வழக்கில் வாதியின் மனைவி. என்னுடைய முதல் விசாரணைக்காக நிரூபண வாக்குமூலத்தை தாக்கல் செய்கிறேன். இந்த நிரூபண வாக்குமூலம் என்னுடைய தகவலின் அடிப்படையிலேயே தயார் செய்யப்பட்டுள்ளது. நிரூபண வாக்குமூலத்தை எனது வழக்கறிஞர் படித்துப்பார்த்து, நான் உண்மை என உறுதி கூறி கையொப்பம் செய்துள்ளேன்.

1. 18.04.1957 தேதியிட்ட வாதியின் தாயாரைப் பெற்ற தாத்தா கோபால் நாயுடு அவர்கள் வழக்குத்தொகுப்புரை 1வது அட்டவணைச் சொத்தைப் பொறுத்து எழுதிக்கொடுத்த ஒத்தி ஆவணத்தின் சார்பதிவாளர் நகல் வா.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

2. 10.05.1962 தேதியிட்ட வாதியின் தாயாரைப் பெற்ற தாத்தா கோபால் நாயுடு அவர்கள் வழக்குத்தொகுப்புரை 1வது அட்டவணைச் சொத்தைப்

பொறுத்த ஒத்தியை மீட்டிய ஆவணத்தின் சார்பதிவாளர் நகல் வா.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

3. 31.05.2018 தேதியிட்ட வாதியின் தாயார் பாப்பாத்தியம்மாள் வாதிக்கும், அவரது சகோதரருக்கும் வழக்குத்தொகுப்புரை 1வது அட்டவணைச் சொத்தைப் பொறுத்து எழுதிக்கொடுத்த பதிவு பெற்ற ஏற்பாடு ஆவணத்தின் அசல் வா.சா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

4. 16.11.2021 தேதியிட்ட வாதியின் சகோதரிகள், வாதிக்கும், அவரது சகோதரருக்கும் வழக்குத்தொகுப்புரை 1வது அட்டவணைச் சொத்தைப் பொறுத்து எழுதிக்கொடுத்த பாகபாத்திய விடுதலை ஆவணத்தின் அசல் வா.சா.ஆ.4 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

5. 17.11.2021 தேதியிட்ட வாதிக்கு, அவரது சகோதரர் வழக்குத்தொகுப்புரை 1வது அட்டவணைச் சொத்திலுள்ள அவரது பிரிவின்றி பாதிப்பங்கைப் பொறுத்து எழுதிக்கொடுத்த ஏற்பாடு ஆவணத்தின் அசல் வா.சா.ஆ.5 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

6. 03.02.2022 தேதியிட்ட வாதி அவரது மனைவி மாரியம்மாளை பொது அதிகாரம் பெற்ற முகவராக நியமனம் செய்து எழுதிக்கொடுத்த பதிவு பெற்ற பொது அதிகார ஆவணத்தின் அசல் வா.சா.ஆ.6 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

7. 02.02.2019 தேதியிட்ட வழக்குத்தொகுப்புரை 1வது அட்டவணைச் சொத்தைப் பொறுத்து வாதி மற்றும் அவரது சகோதரர், தாயார் பாப்பாத்தியம்மாள் மற்றும் பாட்டி மாரியம்மாள் ஆகியோர்களின் பெயர்களிலுள்ள 10(1) கணக்கு இணையவழி பதிவிறக்க நகல் வா.சா.ஆ.7 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

8. 23.04.2024 தேதிய வழக்குத்தொகுப்புரை 1வது அட்டவணைச் சொத்தைப் பொறுத்து வாதியின் பெயரிலுள்ள 10(1) கணக்கு இணையவழி பதிவிறக்க நகல் வா.சா.ஆ.8 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

9. 23.04.2024 தேதிய வழக்குத்தொகுப்புரை 6வது அட்டவணைச் சொத்தைப் பொறுத்து பிரதிவாதிகள் மற்றும் இருளாச்சியம்மாள் ஆகியோர்களின் பெயர்களிலுள்ள 10(1) கணக்கு இணையவழி பதிவிறக்க நகல் வா.சா.ஆ.9 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

10. 23.04.2024 தேதிய வழக்குத்தொகுப்புரை 1வது அட்டவணைச் சொத்தைப் பொறுத்த நிலஅளவை ஆவணத்தின் இணையதள நகல் வா.சா.ஆ.10 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

11. 23.04.2024 தேதிய வழக்குத்தொகுப்புரை 6வது அட்டவணைச் சொத்தைப் பொறுத்த நிலஅளவை ஆவணத்தின் இணையதள நகல் வா.சா.ஆ.11 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

12. வழக்குத்தொகுப்புரை அட்டவணைச் சொத்துக்களை விளக்கும் வரைபடம் வா.சா.ஆ.12 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

பிரதிவாதி தரப்பு வழக்கறிஞரின் வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணை மற்றொரு தேதிக்கு ஒத்தி வைக்கப்படுகிறது.

**ஒப்பம்/- K.N. குரு**
**மாவட்ட உரிமையியல் நீதிபதி**
**செங்கோட்டை**